
# 10 மாதரும் மலர்ப்பொய்கையும்

மலர் நிறைந்த பொய்கையும் மீன் நிறைந்த வானமும் எஞ்ஞான்றும் கவிஞர் மனத்தைக் கவரும் இயற்கைக் காட்சிகளாகும். காலையிலே தோன்றும் கதிரவனொளியால் களித்து விரியும் கமல மலரைக் காணும்பொழுது கவிஞரின் உள்ளமும் மலர்வதாகும். இத்தகைய இயற்கை அழகினை மாந்தி இன்புற்ற கவிஞர் தரும் காட்சிகளைப் பார்ப்போம்.

நீலத்திரை விரித்த வானத்திலே, கதிரவன் ஒளி வீசி எழுந்தான். கண்களைக் கவரும் அழகு வாய்ந்த கமல மலர்களில் கள்ளுண்டு களிக்கப் போந்த கரு வண்டுகள் பொய்கையின் மீது சுற்றிச் சுழன்று இன்னிசை பாடின. பகலவன் ஒளியால் இதழ் விரிந்து இலங்கிய செங்கமல மலரில் வெள்ளை அன்னம் ஒன்று இனிது அமர்ந்திருந்தது. காலைப் பொழுதில் வீசிய இளங்காற்றின் இனிமையை நுகர்ந்த அன்னம் தெள்ளிய திரைகள் தாலாட்டக் கமலப் பள்ளியில் இனிது துயின்றது. இவ்வாறு பூஞ் சேர்க்கையில் கண்வளர்ந்த அன்னத்தின் அழகினை,





இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

''தாய் தன் கையின் மெல்லத்
தண்ணென் குறங்கி னெறிய
வாய்பொன் அமளித் துஞ்சும்
மணியார் குழவிபோலத்
தோயும் திரைகள் அலைப்பத்
தோடார் கமலப் பள்ளி
மேய வகையில் துஞ்சும்
வெள்ளை அன்னம் காண்மின்''

என்று பாடினார் சிந்தாமணி ஆசிரியர். அன்பார்ந்த குழவியை அழகிய மஞ்சத்திலமைத்து, அதன் மேனியைக் கைகளால் தடவித் துயில்விக்கும் அன்னை போல் ஈரம் வாய்ந்த பொய்கை, கமலப் பள்ளியில் அமர்ந்த அன்னத்தைத் தன் அலைக் கைகளால் தட்டித் துயில்வித்ததென்று கவி அமைத்துள்ள உவமை சால அழகியதாகும். தண்மை வாய்ந்த பொய்கை, தலையாய அன்பு வாய்ந்த அன்னையை ஒத்தது.

மெல்லிய திரைகள் அன்னையின் மெல்லிய கரங்களை ஒத்தன. அத்திரைகள் தோய்தலால் அன்னம் அடைந்த இன்பம், அன்னையின் கை தோய்தலால் அருங்குழவியடையும் இன்பத்தை நிகர்த்தது. அன்னம் துயிலுதற்கமைந்த நறுமணங்கமழும் கமலப்பள்ளி மெல்லிய வெண்பட்டு விரித்த விழுமிய மஞ்சம் போன்றது என்று கவிஞர் எழுதியமைத்த ஓவியம் கற்போர் மனத்தைக் கவர்வதாகும்.

இத்தகைய பொய்கையில் நீலத் துகிலுடுத்த ஒரு மங்கை நீராடச் சென்றாள். அவ்வழகிய ஆடையில் குயிற்றிய செம்மை சான்ற மணிகளிலே கதிரவன் ஒளி வீசிய பொழுது அம்மணிகளினின்று எழுந்த நிழற்சுடர்கள் பொய்கையின் மீது விழுந்து நெருங்கிப் பூத்த செந்தாமரையை நிகர்த்தன. அச்சுடர்களை சேய்மையிலிருந்து கண்ட மட அன்னம் ஒன்று விரைந்தோடிச் சென்று ஆர்வத்தாற் கவ்விற்று. மணிகளின் நிழலாய சுடர்கள் வாயில் அகப்படாமையால் தன் மடமையை நினைத்து நாணிய அன்னம், வந்த வழியே வெட்கமுற்று விரைந்து சென்றது. இத்தகைய இனிய இயற்கைக் காட்சியை,

'' நீலத் துகிலிற் கிடந்த
நிழலார் தழலம் மணிகள்
கோலச் சுடர்விட் டுமிழக்
குமரி அன்னம் குறுகிச்
சால நெருங்கிப் பூத்த
தடந்தா மரைப்பூ வென்ன
வாலிச் சுடர்கள் கவ்வி
அழுங்கும் வண்ணம் காண்மின் ''

என்று கவிஞர் நயம்படப் பாடினார்.

(நீலத் துகிலின் இடையே இலங்கிய செம்மணிகள் பசுமையான தாமரை இலைகளின் நடுவே விளங்கிய செங்கமல மலர்போல் திகழ்ந்தன.) நீராடப் போந்த மங்கையின் நீலப் புடைவையில் செம்மணிகள் நெருக்கமாகப் பதிந்திருந்தமையால், கதிரவன் ஒளியில் அவற்றின் நிழல்கள், நீர்ப்பரப்பில் நெருங்கி விழுந்து சால நெருங்கிப் பூத்த செந்தாமரையை நிகர்த்தன. நாள்தோறும் நற்றாமரைக் குளத்தில் வாழ்ந்து செங்கமல மலர்களைச் செவ்வையாக அறிந்திருந்த அன்னமே, செம்மணியின் சுடர்களைச் செந்தாமரை என்று மயங்கிற்றென்றால், அம்மணிகளின் செம்மை சான்ற ஒளி, சொல்லாமலே விளங்குமன்றோ? அச் சுடர்களைத் தாமரை என்று கருதி அன்னம் விரைந்து சென்று கவ்விய ஆர்வமும், அச் சுடர்கள், வாயிலகப்படாமையால் அழுங்கிய தோற்றமும் நகைச்சுவை பயப்பனவாகும். ஆகவே, மங்கை புனைந்திருந்த மணியாடையின் சிறப்பையும், அம் மணிகள் கதிரவன் ஒளியால் சுடர் உமிழ்ந்த செம்மையையும், சிந்தாமணிக் கவிஞர் அழகுற உணர்த்திப் போந்தார்.

(மலர்ப் பொய்கையின் அழகையும், மெல்லிய பூங்காற்றின் இனிமையையும் நுகர்ந்து நெடுநேரம், மங்கை நீராடுவாளாயினாள்) ; பொய்கையிலே இயற்கை இன்பம் நுகர்ந்த நிலையில் வீட்டையும் மறந்தாள்; தன்னோடு போந்த பஞ்சரக்கிளியின் பசியையும் மறந்தாள். இவ்வாறு தன்னையும் மறந்து தாமரைத் தடாகத்தில் விளையாடிக்கொண்டிருந்த மங்கையைக் கரையேற்றுதற்கு ஒரு சூழ்ச்சி செய்தது அவ்விளங்கிளி; தன்னைக் காதலித்து வளர்த்த தலைவியை நோக்கி, ‘பாம்பு’ என்று பதறிக் குளறிக் கூறிற்று. ‘பாம்பு’ என்ற சொற்கேட்ட மங்கை, மனம் பதைத்துக் காதில் அணிந்த தோடு கழல, விரைந்தோடிக் கரை சேர்ந்தாள். இந் நிகழ்ச்சியை ஒரு சொல்லோவியமாக எழுதி அமைத்தார் சிந்தாமணிக் கவிஞர்.

‘‘தீம்பாற் பசியி னிருந்த
        செவ்வாய்ச் சிறுபைங் கிளிதான்
ஓம்பு தாய்நீர் குடைய
        ஒழிக்கும் வண்ணம் நாடிப்
பாம்பா மென்ன வெருவிப்
        பைம்பொன் தோடு கழலக்
காம்பேர் தோளி நடுங்கிக்
        கரைசேர் பவளைக் காண்மின்’’

என்பது அவர் பாட்டு.

பால் நினைந்தூட்டி வளர்த்த பசுங்கிளியின் பசியையும் மறந்து தலைவி நீராடத் தலைப்பட்டாள் என்று கவிஞர் கூறுமாற்றால், மாண்பமைந்த மலர்ப் பொய்கையின் பெருமை இனிது விளங்குவதாகும். அத் தலைவி, தண்ணளியோடு பாலூட்டும் தாய் ஆதலால், மதி நலம் வாய்ந்த கிளி அவள் மனத்தைத் துன்புறுத்தாது தன் பசியைத் தீர்த்துக்கொள்ள ஒரு வழியை நாடிற்று. மலர் நிறைந்த பொய்கையில் மீன் முதலாய உயிர்களும், அன்னம் முதலாய பறவைகளும் நிறைந்திருப்பினும், மங்கைக்குப் பாம்பினிடத்துள்ள பயம் மிகப்

பெரிதெனக் கருதிய கிளியின் மதி நலம் அறிந்து மகிழத்தக்கதாகும். இவ்வாறு செவ்வியறிந்து பேசுவதற்குரிய முறையில் அக் கிளியைப் பயிற்றியிருந்த மங்கையின் மதிநலமும் நன்கு விளங்குகின்றது. ஆகவே, குளிர்ந்த நீர் நிறைந்த பொய்கையின் பெருமையும், அந் நீரில் மகிழ்ந்து விளையாடிய மங்கையின் மதிநலமும் சிந்தாமணிக் கவிஞரால் சிறப்பாக உணர்த்தப்பட்டன.

மங்கை, அஞ்சி ஓடிக் கரையேறியபொழுது அவள் காதிலணிந்திருந்த தோடுகளில் ஒன்று கழன்று தண்ணீரில் விழுந்துவிட்டது. தோடிழந்த பாவை துடித்தாள்; கண்ணீர் வடித்தாள். ‘ ஐயோ! நான் என்ன செய்வேன்? பொய்கைக்குப் போக வேண்டாம் என்று அன்னை தடுத்தாளே! அவள் தடையை மீறி வந்தேனே! வெறுங் காதுடன் வீட்டிற்குச் சென்றால் அன்னை சீறுவாளே! திட்டிக் கொட்டுவாளே! இப் பொய்கையில் இறங்கித் தேடித் தருவார் யாரையும் காணேனே! என் கண்ணனைய தோழியரும் கைவிட்டு சென்றார்களே! அதோ! ஒரு மெல்லியல் அன்னம் கரையருகே நீந்தி வருகின்றது. இன்னல் உற்ற என் நிலையைக் கண்டு இரக்கமுற்றுத்தான் வருகின்றது போலும் ! , என்றெண்ணிப் பேசலுற்றாள். ‘‘மெல்லியல் அன்னமே! உன்னை வணங்குகின்றேன் ! எனக்கு நீ ஒரு நன்மை செய்ய வேண்டும். நீ வாழும் பொய்கையில் என் காதணி கழன்று விழுந்து விட்டது. அதை நினைத்தால் என் நெஞ்சம் நடுங்குகின்றது. என் தாய் பொல்லாதவள்! நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும் ; போக்கடித்த நகையை எடுத்துத் தர வேண்டும்’’ என்று கைகூப்பித் தொழுதாள்.

‘‘ மின்னொப் புடைய பைம்பூண்
        நீருள் வீழக் காணாள்
அன்னப் பெடையே தொழுதேன்
        அன்னை கொடியள் கண்டாய்
என்னை அடிமை வேண்டின்
        நாடித் தாஎன் றிறைஞ்சிப்
பொன்னங் கொம்பின் நின்றாள்
        பொலிவின் வண்ணம் காண்மின்’’

என்பது சிந்தாமணி.

பொய்கையிலே காதணியைப் போக்கடித்த மங்கை, ஒரு பெண் அன்னத்தை நோக்கித் தன் குறையை முறையிட்டாள் என்று பொருத்தமாகக் கூறினார் கவிஞர். ‘ பெண்ணுக்குப் பெண்மைதான் இரங்கும் ’ என்று எண்ணி, ‘அன்னப் பெடையே’ என்று அழைத்தாள்; அதன் கருணையைப் பெறுவதற்காகக் கைகூப்பித் தொழுதாள் ; மேலும், அதன் உள்ளத்திலெழுந்த இரக்கத்தைப் பெருக்கும் பொருட்டு ‘‘ அன்னை கொடியள் ’’ என்று அறிவித்தாள் ; காலத்திற் செய்யும் உதவிக்கு என்றென்றும் கடமைப்பட்டவள் என்று தன் நன்றியறிதலைப் புலப்படுத்தினாள் என்பது கவிஞர் கருத்து. இத்தகைய நயங்களெல்லாம் சிந்தாமணிச் சொல்லோவியங்களிற் சிறந்து விளங்கக் காணலாம்.

**-ரா.பி. சேதுப்பிள்ளை**

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| பொய்கை | - | குளம் |
| பள்ளி | - | படுக்கை |
| எஞ்ஞான்றும் | - | எப்பொழுதும் |
| குறங்கு | - | தொடை |
| துஞ்சும் | - | நித்திரை செய்யும் |
| மாந்துதல் | - | பருகுதல் |
| குயிற்றிய | - | பதித்த |
| வெருவி | - | பயந்து |
| இறைஞ்சி | - | பணிந்து |

## கிரகித்தற் பயிற்சி

1. நீராடச்சென்ற மங்கையின் நீலத்துகிலை அன்னம் ஏன் கௌவியது?
2. பாம்பு! பாம்பு! எனக் கிளி மொழிந்ததைக் கேட்டு மங்கை கரையேறிய காட்சியை ஆசிரியர் எவ்வாறு சித்திரிக்கின்றார்?
3. கிளியின் மதிநுட்பத்தை விளக்குக.
4. பொய்கையில் காதணியைத் தொலைத்த மங்கை அதனை ஏன் அன்னப் பெடையிடம் முறையிட்டாள்?
5. ‘கமலப்பள்ளி’ என்ற தொடரின் சிறப்பினை எடுத்துக் காட்டுக.
6. மாதரும் மலர்ப்பொய்கையும் என்ற தலைப்பின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.
7. அன்னையோடு பொய்கையைக் கவிஞர் ஒப்பிட்டுள்ள விதத்தினை எடுத்துக் காட்டுக.

## செயற்பாடு

**குழுவாக இணைந்து பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.**

1. இக்கட்டுரையின் இரண்டாம் பந்தியில் எத்தனை வாக்கியங்கள் உள்ளன?
2. ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எழுதுங்கள்.
3. அவ்வாக்கியங்களைக் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

| | எழுவாய் அடை | எழுவாய் | செ.பொ.அடை | செயப்படு பொருள் | பயனிலை அடை | பயனிலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |

4. கட்டுரையில் கையாளப்பட்டுள்ள உவமையோடு கூடிய வாக்கியங்களை எழுதுக.
5. பின்வரும் தலைப்புகளின் கீழ் உங்கள் குழுவின் கருத்துக்களை அறிக்கைப்படுத்துங்கள்.
   i கட்டுரையின் பிரதான கருத்து  ii துணைக்கருத்துக்கள்
   iii ஆசிரியர் கையாண்டுள்ள உத்திகள்  iv மொழிநடையின் சிறப்பு

## இலக்கணம்

### வினைச் சொல் I

மங்கை அஞ்சி ஓடிக் கரையேறிய பொழுது அவள் காதில் அணிந்திருந்த தோடுகளில் ஒன்று கழன்று நீரில் விழுந்து விட்டது. தோடு இழந்த பாவை **துடித்தாள்**; கண்ணீர் **வடித்தாள்**.

இந்த உரைப்பகுதியைப் பாருங்கள். அதில் தடித்த எழுத்தில் தரப்பட்டிருக்கும் சொற்களை அவதானியுங்கள். இவையாவும் வினைச் சொற்களே. ஏனெனில் அவை பொருளின் புடை பெயர்ச்சியை. அதாவது வினை நிகழ்ச்சியை உணர்த்துகின்றன. அவையாவும் வினைச் சொற்களேயானாலும் அவற்றுள்ளே சில வேறுபாடுகள் இருப்பதையும் நாம் அவதானிக்கலாம். உதாரணமாக **துடித்தாள்** / **அஞ்சி** / **இழந்த** என்னும் மூன்று சொற்களையும் எடுத்துக் கொள்வோம். மூன்றும் ஒத்த தன்மை உடையனவல்ல. துடித்தாள் என்ற சொல் துடித்தலாகிய வினை நிகழ்ச்சியை உணர்த்துகின்றது. அவ்வினை நிகழ்ந்து முடிந்து விட்டது எனத் தெளிவாகிறது.அந்த வினையை நிகழ்த்தியவள் ஒரு பெண் என்பதும் தெரிகிறது. அஞ்சி, இழந்த என்ற வினைச் சொற்களில் முறையே அஞ்சுதல், இழத்தல் ஆகிய வினை நிகழ்ச்சிகள் சுட்டப்பெறுகின்றன. அவ்வினைகள் நிகழ்ந்து முடிந்து விட்டதும் தெரிகிறது. ஆனால் அந்த வினைச் சொற்கள் முற்றுப் பெறாமல் தாம் முற்றுப் பெறுவதற்கு வேறு சொற்களை வேண்டி நிற்கின்றன என்பதும் புலப்படுகின்றது. அந்த வினைகளை நிகழ்த்தியவர் யார்? அல்லது நிகழ்த்தியது எது? என்ற விபரங்களும் தெரியவில்லை.

இதனால் வினை நிகழ்ச்சியை மேற் கொண்டவரின் திணை, பால், எண், இடம் என்பவற்றை உணர்த்தி வினைமுற்றுப் பெற்று நிற்கும் வினையை முற்று வினை / வினைமுற்று என்போம். இவ் விபரங்கள் உணர்த்தப்படாது எஞ்சி நிற்கின்ற வினையை எச்ச வினை என்போம். இவ்வகையில் துடித்தாள் என்பது முற்று வினை / வினைமுற்று ஆகும். அஞ்சி, இழந்த என்பன எச்ச வினைகளாகும்.

இனி அஞ்சி இழந்த என்னும் எச்சவினை இரண்டையும் எடுத்துக் கொள்வோம். அஞ்சி என்ற எச்சச் சொல் ஓடினாள் என்ற வினைச் சொல்லோடு முடிகிறது. இழந்த என்ற எச்சச் சொல் பெண் என்ற பெயர்ச் சொல்லோடு முடிகிறது. ஆகவே அஞ்சி என்பதும் அது போல நிற்கின்ற எச்ச வினைகளும் வினையெச்சம் எனப்படும். இழந்த என்பதும் அது போன்ற பிற எச்ச வினைகளும் பெயரெச்சம் எனப்படும்.

- ♦ வினைமுற்றானது பால் காட்டும் விகுதியோடு கூடி நிறைந்து நிற்கும்.
- ♦ பெயரெச்சமாவது பால் காட்டும் முற்று விகுதி பெறாது குறைச் சொல்லாய் நின்று பெயரைக் கொண்டு முடியும்.
- ♦ வினையெச்சமானது பால் காட்டும் முற்று விகுதி பெறாது குறைச் சொல்லாய் நின்று வினையைக் கொண்டு முடியும்.

## பயிற்சி

1. மாதரும் மலர்ப் பொய்கையும் என்ற கட்டுரையிலிருந்து வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என்பவற்றுக்கு பத்து உதாரணங்களை தெரிவு செய்க.
2. நீலத் துகிலிற் கிடந்த ---------- என்ற பாடலில் வரும் பெயரெச்சங்களை இனங்கண்டு எழுதுக.
3. கீழ் வரும் வினைமுற்றுக்கள் ஒவ்வொன்றும் உணர்த்தும் திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றைக் குறிப்பிடுக.

| | திணை | பால் | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|
| எழுந்தாள் | உயர்திணை | பெண்பால் | ஒருமை | படர்க்கை | இறந்தகாலம் |
| எழுந்தேன் | | | | | |
| வருகிறேன் | | | | | |
| பார்த்தான் | | | | | |
| மகிழ்வேன் | | | | | |
| செல்வேன் | | | | | |
| விழுந்தான் | | | | | |

4 பின்வரும் பாடலில் காணப்படும் உடன்பாட்டு வினைகளைக் குறிப்பிடுக. அவற்றை எதிர்மறை வினைகளாக மாற்றி எழுதுக.

ஊரிலுள்ள பெண்கள் எல்லாம்
உள்ளத்தைப் பூர்த்தி செயும்
சீரியர்க்கு மாலையிட்டுச்
சீரடைந்து வாழ்கின்றார்.
தோகைமயிலே! இதை நீ கேள்
சொல்லுகின்றேன்
நாகம்போல் சீறுகின்ற நாதரிடம்
சொல்லிவிடு
பச்சிலைக்குச் சஞ்சீவி பர்வதம்
செல்வேன் என்றாள்.

5. இங்கு தரப்பட்டுள்ள எச்ச வினைகளை பொருத்தமான முடிக்கும் சொற்களோடு வாக்கியங்களில் அமைக்குக.

- பாடிய
- அழுகின்ற
- செய்த
- பாடி
- நிறைந்த
- எழுவதற்கு
- எறிய
- வளர்த்த
- விழுகிற
- எழுந்து
- வீசிய
- புலப்படுத்த

## மொழி வளம்

**மரபுத் தொடர்**

| | | | |
|---|---|---|---|
| 1. | கைநீட்டுதல் | - | அடித்தல் |
| 2. | அடுக்குப் பண்ணல் | - | ஆயத்தம் செய்தல் |
| 3. | ஆழம் பார்த்தல் | - | ஒருவனது அறிவு முதலியவற்றை ஆராய்தல் |
| 4. | கழுத்தறுத்தல் | - | தீமை செய்தல் |
| 5. | இரண்டு தோணியில் கால்வைத்தல் | - | இரண்டு காரியங்களில் ஒரே நேரத்தில் ஈடுபடல் |
| 6. | காது குத்தல் | - | ஏமாற்றுதல் |
| 7. | கைதூக்கி விடுதல் | - | துன்பத்திற் காத்தல் |
| 8. | செவி சாய்த்தல் | - | இணங்கிக் கேட்டல் |
| 9. | தலைகாட்டுதல் | - | வெளிவருதல் |
| 10. | தலையால் நடத்தல் | - | முறைதவறி நடத்தல் |
| 11. | வாய்காட்டுதல் | - | எதிர்த்துப் பேசுதல் |
| 12. | அள்ளி இறைத்தல் | - | அளவுக்கு அதிகமாக செலவு செய்தல் |
| 13. | கரையேறுதல் | - | உய்வடைதல் |

| | | | |
|---|---|---|---|
| 14. | நுனிப்புல் மேய்தல் | - | மேலெழுந்த வாரியாகக் கற்றல் |
| 15. | கைம்மாறு செய்தல் | - | பிரதியுபகாரம் செய்தல் |
| 16. | நாக்குப் புரளுதல் | - | சொல் தவறுதல் |
| 17. | நாடி விழுதல் | - | தைரியமிழத்தல் |
| 18. | பதம் பார்த்தல் | - | சோதனை செய்தல் |
| 19. | கால் கொள்ளுதல் | - | ஆரம்பமாதல் |
| 20. | வயிறு குளிர்தல் | - | திருப்தியடைதல் |

**பயிற்சி**

பின்வரும் மரபுத்தொடர்களின் பொருள் புலப்படுமாறு வாக்கியம் அமையுங்கள்.

1. காது குத்தல்
2 தோள்கொடுத்தல்
3. தலையால் நடத்தல்
4. வயிறு குளிர்த்தல்
5. நாக்குநீளுதல்

## ஆக்கத்திறன்

**உரைச்சித்திரம் பின்வரும் பண்புகளைக் கொண்டதாகக் காணப்படும்.**

1. குறித்த ஒரு விடயத்தை ஒரு வரன்முறைக்குள் அமைத்துக் கூறுதல்.
2. தலைப்பு உள்ளடக்கத்துடன் பொருந்திக் காணப்படுதல்.
3. கருத்துச் செறிவுள்ள, நியமமொழி நடை கையாளப்படும்.
4. பாத்திரங்களுக்கோ, பாவங்களுக்கோ முன்னுரிமை வழங்காது , குரல் வளத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

**பயிற்சி**

1. ஆசிரியரின் உதவியோடு உரைச்சித்திரம் ஒன்றைச் செவிமடுங்கள்.
2. குழுக்களாகப் பிரிந்து, 'ரா.பி. சேதுப்பிள்ளையும் சீவகசிந்தாமணியும்' எனும் தலைப்பில் வானொலி உரைச்சித்திரம் ஒன்றை ஆக்குங்கள்.
3. நீங்கள் தயாரித்த வானொலி உரைச்சித்திரத்தைக் குரல் வளத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வாசித்துக் காட்டுங்கள்.